# பொருளியல்

**விலைமட்டம் தொடர்பான எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் அளவீடு என்பவற்றை பகுப்பாய்வு செய்வர்.**




# தேர்ச்சிமட்டம் 7.4

**பொது விலைமட்டம் :-**

ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் சராசரி விலையே பொது விலைமட்டம் ஆகும். பொது விலைமட்டம் ஒரு நுகர்வோர் விலைச்சுட்டெண் மூலம் அளவீடு செய்யப்படுகிறது.

**விலைச்சுட்டெண் :-**

குறிப்பிட்ட ஒரு ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு குறித்த ஒரு நாட்டில் உள்ள மக்கள் அனைவராலும் பொதுவாக நுகரப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் சராசரி விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் குறிகாட்டி விலைச்சுட்டெண் எனலாம்.





**தொகுப்பு** - திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி)

**கணனி வடிவமைப்பு** - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- **நுகர்வோன் விலைச்சுட்டெண்ணைத் தயார் செய்வதற்கு பின்வரும் சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது.**

$$\text{நுகர்வோர் விலைச்சுட்டெண்} = \frac{\sum P_1 Q_1}{\sum P_0 Q_0} \text{X}100$$




| அம்சம் | CCPI | NCPI |
|---|---|---|
| அடியாண்டு | 2013 | 2013 |
| பொருட்தொகுதி | 364 பண்டங்கள் 12 தொகுதி | 407 பண்டங்கள் 12 தொகுதி |
| புவியியற் பிரதேசமும் குறிக்கப்பட்ட சனத்தொகையும் | கொழும்பு மாவட்டத்தின் பிரதான நகரத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்பாளர்களும் | இலங்கையில் அண்னைத்து மாகாணங்களிலுமுள்ள அனைத்துக் குடியிருப்புகளும் |
| நிறைக்கட்டமைப்பு | உணவுப்பொருட்களில் செலவின் | சதவீதம் 44.04 % |
| விலை சேகரிப்பு மையங்கள் | கொழும்பு நகரப் பிரதேசங்களை உள்ளடக்கிய 14 சேகரிப்பு நிலையங்கள் | ஒவ்வொரு மாவட்டத்தின் நகரில் உள்ள 3 விலைசேகரிப்பு நிலையங்கள் |
| அடிப்படை காலத்தில் மொத்த செலவீனம் | பொருள் மற்றும் சேவைக் கூடையின் மாதாந்தச் செலவு 27972.11 | பொருள் மற்றும் சேவைக் கூடையின் மாதாந்தச் செலவீனம் 32141.69 |
| கணிப்பிடும் நிறுவனம் | குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் | குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்

- ⇒ பொருட்கள் சேவைகளது உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படும் விலைகளின் போக்கினை வெளிப்படுத்துவதாக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் கணிக்கப்படுகிறது.
- ⇒ வேளாண்மை உற்பத்திகள் (161 வகையான பொருட்கள்) தயாரிப்பு, மின்சாரம், நீர்சேகரிப்பு, தூய்மையாக்கல் மற்றும் வினியோகம் ஆகியவற்றின் விலைகள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.
- ⇒ அடியாண்டு 2013 ஆகும்.
- ⇒ குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிப்பிடப்படுகின்றது.
- ⇒ மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணுக்கு பதிலாக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பணவீக்கம் (INFLATION)

- ⇒ ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச்செல்லுதல் பணவீக்கம் எனப்படுகின்றது. இது பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் அளவானது ஒவ்வொரு பண்டத்தின் விலையிலேற்படும் மாற்றத்தினால் அல்லாமல் எல்லா பொருட்கள் சேவைகளின் சராசரி விலைகளில் ஏற்படும் மற்றத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

## பணவீக்கமின்மை / பணவீக்க அகல்வு / (DISINFLATION)

- ⇒ ஒரு நாட்டின் பொது விலைமட்டத்தினது அதிகரிப்பு வேகம் / வீதம் படிப்படியாக குறைவடைந்து செல்லுதல் பணவீக்கமின்மை எனப்படும். பணவீக்கமின்மையின் போது பணவீக்க வீதம் குறைவடைந்து செல்கின்றது.

## பணச்சுருக்கம் (DE INFLATION)

- ⇒ ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லுதல் பணச்சுருக்கமாகும்.

**தொகுப்பு** - திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி)

**கணனி வடிவமைப்பு** - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## முதன்மைப் பணவீக்கம் (HEAD LINE INFLATION)

⇒ நுகர்வோன் விலைச்சுட்டெண்ணூடாக வெளியிடப்படும் மூல பணவீக்க இலக்கமாகும். முதன்மை பணவீக்கமானது ஒரு பொருளாதாரத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் எந்தளவிற்கு அனைத்துப் பொருட்கள் சேவைகளினதும் சராசரி விலைகள் அதிகரித்துள்ளன என்பதை பிரதிபளிக்கின்றது.

⇒ இப்பணவீக்கம் ஒரு பிரதேசத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதைக் காட்டும் ஒரு அளவீடாகும். முதன்மைப் பணவீக்கமானது வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதால் சாதாரண குடும்பங்களுக்கு அதிகம் பயனுள்ளதாகும்.

⇒ மிகவும் அதிகளவு ஏற்ற இறக்கங்களைப் பண்பாகக் கொண்ட உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகளைக் கவனத்திற் கொள்வதால் முதன்மைப் பணவீக்கமானது பணவீக்க வீதத்தினை மிகச்சரியாக பிரதிபலிக்கமாட்டாது.

## மையப்பணவீக்கம் / அடிப்படைப் பணவீக்கம் - (CORE INFLATION)

⇒ முதன்மைப் பணவீக்கத்தில் காணப்படுகின்ற நிரம்பல் அதிர்ச்சிகள் போன்ற விலைத்தலம்பல்களை அகற்றும் பொருட்டு சிலவகைப் பொருட்களின் விலைகளை நீக்கிக் கணிக்கப்படும் விலைச்சுட்டெண்ணின் போக்கு அடிப்படைப் பணவீக்கமாகும்.

⇒ பின்வரும் விடயங்கள் முதன்மைப் பணவீக்கத்திலிருந்து நீக்கப்பட்டு அடிப்படைப் பணவீக்கம் கணிக்கப்படுகின்றது.

1. உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகள்.
2. வானிலை மாற்றங்கள் மற்றும் வெளியக அதிர்ச்சிகளால் ஏற்படும் விலைமட்ட மாற்றங்கள்
3. அரச வரிக்கொல்கையினால் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள்.


## பணவீக்க வீதம்

⇒ இரண்டு காலப்பகுதிகளுக்கிடையில் நுகர்வோர் விலைச்சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் நூற்றுவீதம் பணவீக்கவீதம் எனப்படும்.

$$\text{பணவீக்கவீதம்} = \frac{\text{நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{ஆரம்ப நுகர்வோர் விலைச்சுட்டெண்}} \times 100$$




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## கேள்வித்தூண்டல் பணவீக்கம்

⇒ மொத்த நிரம்பல் மாறாத (AS) நிலையில் மொத்த கேள்வி (AD) அதிகரிப்பினூடாக பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வதனால் பொதுவிலைமட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு கேள்வித்தூண்டல் பணவீக்கம் எனப்படும்.




தொகுப்பு - திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி)
கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## பணவீக்கத்தை விளக்கும் நாணயக்கணியக் கோட்பாடு

⇒ நாணயக்கணியக் கோட்பாடானது பிசர் (I.VING FISHER) என்பவரால் முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும். இக்கோட்பாடானது ஒரு நாட்டின் பணநிரம்பலுக்கும் பொதுவிலை மட்டத்திற்குமிடையே தொடர்பை விளக்குகிறது.

⇒ இத்தொடர்பை விளக்குவதற்கு பிசர் MV=PT எனும் பரிமற்று சமன்பாட்டைப் பயன்படுத்தினார்.

⇒ இச்சமன்பாட்டில்

M-பண நிரம்பல்

V-பணத்தின் சுற்றோட்ட வேகம்

P-பொதுவிலை மட்டம்

T-கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை / மெய் உற்பத்தி

⇒ மேலேயுள்ள சமன்பாட்டில் V, T என்பன நிலயானவை என எடுகோள் கொள்ளப்படுகின்றது

⇒ எனவே பிசரின் கருத்துப்படி பணநிரம்பல் அதிகரிக்கும் விகிதாசாரத்தால் பொதுவிலைமட்டமும் அதிகரிக்கும் எனவே பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்கும் இடையில் நேர் விகிதாசரத் தொடர்பு காணப்படுகின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பண நிரம்பலுக்கும் மொத்த கேள்விக்கும் இடையிலான தொடர்பு (கெயின்சின் விளக்கம்)


⇒ பணத்தின் விலை வட்டியாகும். வட்டியானது பணத்தின் நிரம்பலாலும் பணத்தின் கேள்வியாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

⇒ பணநிரம்பல் அதிகரித்தால் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் (வட்டி முதலீட்டினை தீர்மானிக்கும் பிரதான காரணியாகும்)

I=F(r) இங்கு r வட்டி வீதமாகும்

⇒ வட்டிவீதத்திற்கும் முதலீட்டிற்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படுகின்றது.

⇒ வட்டி வீதம் வீழ்ச்சியடையும் போது முதலீடு அதிகரிக்க மொத்தக் கேள்வியும் அதிகரிக்கும்.





⇒ பணநிரம்பல் அதிகரிக்கும் போது வட்டிவீதம் வீழ்ச்சியடைகிறது. இதனால் முதலீடு அதிகரித்துச்செல்லும் நிலையில் மொத்தக்கேள்வி அதிகரிக்கின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# செலவுத்தூண்டல் பணவீக்கம்

⇒ பொருளாதாரமொன்றில் ஏனைய காரணிகள் மாறாதிருக்க உற்பத்திச்செலவில் (குறிப்பாக கூலி) ஏற்படும் உயர்வு காரணமாக மொத்த நிரம்பலில் ஏற்படும் மாற்றம் காரணமாக பொதுவிலைமட்டம் அதிகரிக்கும் என்பதாகும்.




⇒ செலவுத்தூண்டல் பணவீக்கத்தை தோன்றுவிக்கும் சில நிகழ்வுகள்.

1. தொழிலாளர் கூலி உயர்வு
2. எரிபொருள் விலை உயர்வு
3. மூலப்பொருள் விலை உயர்வு
4. காரணிச்சேவைச் செலவுகள் அதிகரித்தல்

கோட்பாட்டு ரீதியாக மேற்கூறியது ஏற்புடையது எனினும் நடைமுறையில் கூலித்தூண்டல் என்பது தொழிலாளரின் உற்பத்தித் திறனை மேம்படுத்துமாயின் உற்பத்தி தொடர்பான சராசரி செலவு குறைய வாய்ப்பு ஏற்படின் பொது வீலைமட்ட உயர்வு தடுக்கப்படலாம்.

- எனவே நடைமுறையில் கூலி அதிகரிப்பு எப்போதும் பொது விலைமட்டத்தை உயர்த்தும் என்பது ஏற்புடையது அல்ல.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பணவீக்கத்தின் விளைவுகள்

## சாதகமான விளைவுகள்

⇒ பொருளாதாரத்தில் உள்ள மென்மையான(5% இலும் குறைந்த) பணவீக்கம் உற்பத்தியாளரை தூண்டுவதாக இருக்கும். அதன் மூலம் உற்பத்திகள் விரிவடைந்து வேலைவாய்ப்புகள் உருவாகும்.

⇒ அரசிற்கான பெறுமானவீத வரி வருமானம் அதிகரிக்கும்

⇒ மாறும் வருமானப் பிரிவினர், கடன்படுநர் நன்மையடைய வாய்ப்பு

## பாதகமான விளைவுகள்

பணத்தின் மெய்ப்பெறுமதி வீழ்ச்சியடையும் இதன் மூலம் வெவ்வேறு பிரிவினர் மீதும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

⇒ வீட்டுத்துறையினருக்கு

1. மெய்வருமானம் பதிப்படைதல்
2. கொள்வனவு ஆற்றல் குறைவடைதல்
3. சேமிப்பு பாதிப்படைதல்
4. வாழ்க்கைத் தரங்கள் பதிப்படைதல்
5. வருமான பங்கீட்டில் ஏற்படும் பாதிப்பு

⇒ உற்பத்தியாளர் மீதானது

1. உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல்
2. இலாப இயலளவு பாதிப்படைதல்
3. உற்பத்திகள் பாதிப்படைதல்

⇒ அரசிற்கானது

1. அரச செலவுகள் அதிகரித்தல்
2. பாதீட்டு குறைகள் விரிவடைதல்
3. அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படைதல்

⇒ முதலீட்டாளர் மீதானது

1. மெய்வட்டி வருமானம் பதிப்படைதல்
2. மூலதன உடபாய்ச்சல் பாதிப்படைதல்

⇒ வெளிநாட்டுத்துறை மீதானது

1. ஏற்றுமதிகள் பாதிப்படைய இறக்குமதிகள் தூண்டப்படல்
2. சென்மதி நிலுவை பாதிக்கப்படல்
3. நாணய மாற்று வீதம் தேய்வடைதல்

தொகுப்பு - திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk